[1994 ஏப்ரல் 29

பெற்று ஒருவரை நியமிப்பதாக இருக்கிறோம். இருந்தாலும் அங்கே இருக்கிற தமிழ்நாடு இன்டஸ்ட்ரியல் கெய்டன்ஸ் அண்ட் எக்ஸ்போர்ட் புரமோசன் பியூரோ என்று சொல்லப்படுகிற தமிழ்நாடு தொழில் வழிக்காட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் அந்தப் பணியை தொடர்ந்து செய்கின்ற காரணத்தாலே அதுபோன்ற அதிகாரிகளை இப்பொழுது நியமிக்க தேவையில்லை என்பதும், பின்னாலே தேவைப்பட்டால் அப்படிப்பட்ட அதிகாரிகளை நியமிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சரோடு கலந்து பேசி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

455—

கீழப்பாவூர் ஒன்றியம், அழகாபுரியில் கிளை நூலகம் அமைத்தல்

** 20687—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், அழகாபுரி கிராமத்தில் கிளை நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:

இல்லை

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

458—

புவனகிரி பேரூராட்சியில் குடிநீர் தேக்கத்தொட்டி அமைத்தல்

** 22087—செல்வி கோ. மல்லிகா :*

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி பேரூராட்சி, கீழ்புவனகிரியில் குடிநீர் தேக்கத்தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைத்துத் தரப்படும் ?

1994 ஏப்ரல் 29]

விடை—

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

(அ) புவனகிரி பேரூராட்சி கீழ்புவனகிரியில் குடிநீர் தேக்கத்தொட்டி அமைக்கும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் *: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

இராமநாதபுரம் மாவட்டம், ஆர். எஸ். மங்கலம் காவல் நிலையத்தில் ஒரு கைதி மரணமுற்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் *: சிறப்புக் கவன ஈர்ப்பு. இராமநாதபுரம் மாவட்டம், ஆர். எஸ். மங்கலம் காவல் நிலையத்தில் — (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன்—காவல் கைதி ஒருவர் மரணம் அடைந்தது பற்றிய ஒரு பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று என்னிடத்தில் திரு. சி. ஞானசேகரன் மற்றும் ச. அழகிரி ஆகியோர் ஒரு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இதுபற்றிச் சுருக்கமாக பேரவையில் விளக்கக் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பிரச்சினையை மட்டும். திரு. ஞானசேகரன்.*

திரு. சி. ஞானசேகரன் *: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், ஆர்.எஸ்.மங்கலம் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட வெண்ணத்தூர் கிராமத்தைச் சேர்ந்த முனியாண்டி என்பவர் இரண்டு நாட்களுக்கு முன்னாலே ஆர்.எஸ்.மங்கலம் காவல் நிலைய ஆய்வாளர், தலைமைக் காவலர், ஜீப் டிரைவர் ஆகிய 3 காவல் துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, சாராய வழக்கு சம்பந்தமாக எடுத்துச்சென்று லாக்கப்பிலே வைத்திருந்தபோது அவர் காவல் நிலையத்திலே சந்தேகமான முறையிலே மரணம் அடைந்தார் என்ற ஒருவகை செய்தியும், ஜீப்பிலே எடுத்துச்சென்றபோது ஜீப்பிலே தாக்கப்பட்டு, ஜீப்பிலே அவர் இறந்துவிட்டார், உடன் அரஸ்ட்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS